தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 69/பேரூ/2022

நாள் 21.07.2022

திரு. V. செந்தமிழ்சேகர்,
கானம் கஸ்பா, தூத்துக்குடி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
கானம் பேரூராட்சி, தூத்துக்குடி மாவட்டம் ... எதிர்மனுதாரர்

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், எண்.7/88 மேலத்தெரு, கானம் கஸ்பா என்ற முகவரியைச் சேர்ந்த திரு. V. செந்தமிழ்சேகர் என்பவரின் 12.04.2022 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.04.2022ல் பெறப்பட்டு, 69/2022என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், எண்.7/88 மேலத்தெரு, கானம் கஸ்பா என்ற முகவரியைச் சேர்ந்த திரு. V. செந்தமிழ்சேகர், தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், கானம் பேரூராட்சியில் முன்பு 7வது வார்டாக இருந்து தற்போது 9–வது வார்டாக உள்ள பகுதியில் வசித்துவரும் திரு. சின்னதுரை என்பவர் புதியதாக வீடு கட்டுவதற்கு வரைபடம் தயார் செய்து அதற்கான பேரூராட்சியின் மதிப்பீட்டுத் தொகையான ரூ.46,000/–ஐ பேரூராட்சியின் தெருவிளக்கு பராமரிப்பு ஒப்பந்த ஊழியரான திரு. வனராஜ் என்பவரிடம் முதல் தவணையாக ரூ.20,000/– ரொக்கமாகவும், இரண்டாவது தவணையாக மேற்படி நபரின் வங்கிக் கணக்கில் ரூ.26,000/–ம் செலுத்தியுள்ளார் என்றும், ஆனால் இன்றுவரை பெற்றுக்கொண்ட பணத்திற்கான ரசீதையோ அல்லது வீட்டிற்கான வரைபட அனுமதி அங்கீகாரத்தையோ பெற்று வழங்கவில்லை என்றும், மாறாக பேரூராட்சியின் சொத்து வரி ரசீதாக வரிவிதிப்பு எண்.943–ஐ திரு த. சின்னதுரை

என்பவருக்கு பற்றுச் சீட்டு எண்.13306 நாள் 13.1.2022ல் வழங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார் (2021–2022 ஏப்ரல்–மார்ச் சொத்து வரி ரூ.1,438/–ம், திடக்கழிவு சேவைக் கட்டணம் ரூ.120/– ஆக மொத்தம் ரூ.1,558/–க்கு ரசீது தந்துள்ளதை இணைத்துள்ளார்).

தனியாக வரைபடத்திற்கான ஒப்பந்ததாரர் கட்டணம் ரூ.2,500/– சேர்த்து மொத்தம் ரூ.4,000/–ஐ பெற்றுக்கொண்டு மேற்படி வீட்டுவரி ரசீது மட்டும் வழங்கப்பட்டுள்ளது என்றும், திரு. சின்னதுரை வீட்டின் வரைபடத்திற்கான தகுதிச்சான்று ரூ.46,000/–க்கான ரசீது வழங்கப்படவில்லை என்றும், இதனால் பேரூராட்சிக்கு ரூ.40,000/– வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும், இதில் சம்பந்தப்பட்ட வரி வசூலர்–1, கணினி ஒப்பந்த ஊழியர்–2, முறைகேடான பணம் வசூல் செய்த மின்விளக்கு ஒப்பந்த ஊழியர் வனராஜ் ஆகிய 3 பேர் மீதும் பேரூராட்சிக்கு வருவாய் இழப்பு சட்டத்தின்கீழ் விசாரணை மேற்கொண்டு போலியாக சொத்துவரி வழங்கிட உடந்தையாக இருந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மேற்படி வருமான இழப்பை ஏற்படுத்திய ஒப்பந்த ஊழியர்கள், தெருவிளக்கு பராமரிப்பு ஊழியர் திரு. வனராஜ் மற்றும் கணினி ஒப்பந்த ஊழியர்கள் இருவர் நடப்பு வருடாந்திர ஒப்பந்தப் புள்ளியின்படி வேலைவாய்ப்புபெற தகுதியற்றவர்கள் என்பதனால், மேற்படி நபர்களின் ஒப்பந்த மனுவை தள்ளுபடி செய்து, கடந்த நிதியாண்டில் அவர்கள் வழங்கிய சொத்துவரி ரசீதுகளை மறு பரிசீலனை செய்து பேரூராட்சிக்கு ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பை ஈடு செய்ய உரிய நடவடிக்கை எடுக்குமாறும், கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக பஞ்சாயத்து உறுப்பினர்கள் மற்றும் தலைவர் இல்லாத நிலையில் செயல் அலுவலர்கள் மட்டும் செயல்பட்டு வந்த காலகட்டத்தில் பேரூராட்சி நிர்வாகத்திற்கு ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பு குறித்து முழுமையான விசாரணையை துறைசார்ந்து எடுக்குமாறும் வேண்டி இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு அளித்துள்ளார். மனுதாரர் தனது புகாருக்கு ஆதாரமாக திரு. சின்னதுரை என்பவருக்கு அளிக்கப்பட்ட சொத்துவரி (வரி விதிப்பு எண்.943) பற்றுச்சீட்டு எண்.13306 நாள் 13.1.2022 ரூ.1,558/–க்கு வழங்கப்பட்டுள்ள ரசீதின் நகலினையும், கானம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு 11.4.2022ல் தனது புகார் குறித்து நடவடிக்கை எடுக்காததற்கு கண்டனம் தெரிவித்து அளித்துள்ள புகார் மனுவினையும் இணைத்தனுப்பியுள்ளார். மேலும், திரு. த. சின்னதுரை என்பவர் கானம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அளித்துள்ள 04.10.2021 நாளிட்ட புகார் மனுவின் நகலினையும் இணைத்தனுப்பியுள்ளார்.

2. தூத்துக்குடி மாவட்டம், கானம் பேரூராட்சி செயல் அலுவலர் மனுதாரரின் புகார் குறித்து 30.5.2022 நாளிட்டு அளித்துள்ள விளக்க அறிக்கையில் மனுதாரரது புகார் மனு தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் பேரூராட்சியின் இளநிலை உதவியாளர் திரு. ரா. தாமரைச் செல்வம் என்பவர் கட்டாயப்படுத்தியதன் காரணத்தினால் ஒப்பந்தப் பணியாளர்கள் தவறு செய்துள்ளனர் என்றும், மேலும் கணினியில் சொத்துவரி ரசீது ஆய்வு செய்யப்பட்டதில் வரிவிதிப்பு எண்.943 பற்றுசீட்டு எண்.13306 நாள் 13.01.2022 சின்னதுரை என்பவரது பெயரில் இல்லை. மேற்படி தேதியில் செல்லான் ரிஜிஸ்டர் ஆய்வு செய்யப்பட்டதில் பற்றுசீட்டு எண்.13306 வேறொருவர் பெயரில் உள்ளதாகவும், வரிவிதிப்பு எண்.943 திரு. க. மாதவசிங் என்பவர் பெயரில் உள்ளதாகவும், வரி விதிப்பு எண்.943ஐ திரு. க. மாதவசிங் என்பவரது பெயரை திரு. சின்னதுரை என்பவர் பெயருக்கு மாற்றம் செய்து ரசீதிற்கு பில் போட்டு பிரிண்ட் எடுத்த பின்னர் அந்த பில் கேன்சல் செய்யப்பட்டு,

பற்றுசீட்டு எண் வேறொரு நபருக்கு திரும்ப பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும், மேலும், திரு. சின்னதுரை என்பவர் பெயரில் போடப்பட்ட சொத்துவரிக்கான தொகை வங்கியில் செலுத்தப்படவில்லை என்றும், திரு. சின்னதுரை என்பவர் பெயரை திரும்பவும் திரு. க. மாதவசிங் என்பவர் பெயருக்கே மாற்றம் செய்ததும் தெரியவந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு தவறு செய்தவர்களை விசாரணை செய்ததில் இளநிலை உதவியாளர் திரு. ரா. தாமரைச்செல்வம் கட்டாயப்படுத்தியதன்பேரில் இவ்வாறு தவறு செய்துள்ளார்கள் என்றும், தெரு மின்விளக்கு பராமரிப்பாளரையும், கணினி பணியாளரையும் நேரில் விசாரித்ததில் இவ்வுண்மை தெரியவந்ததாகவும், இப்புகாருக்கு காரணமான ஒப்பந்த பணியாளர்களை எச்சரித்ததாகவும், இதுபோல் இனி தவறு செய்யமாட்டேன் என எழுத்துபூர்வமாக எழுதியும் கொடுத்துள்ளார்கள் எனவும் கானம் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். மேலும், இதற்குக் காரணமான இளநிலை உதவியாளர் திரு. ரா. தாமரைசெல்வம் என்பவர் மீது நடவடிக்கை மேற்கொள்ள திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

3. கானம் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் மனுதாரர் ஆகியோர் 12.07.2022 அன்று தூத்துக்குடி முகாமில் நடைபெறும் நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ 04.07.2022 நாளிட்ட அழைப்பாணைகள் ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டன. மனுதாரர் மற்றும் கானம் பேரூராட்சி செயல் அலுவலர் இருவரும் இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:-

மனுதாரர் வெ. செந்தமிழ்சேகர் அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் “தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், கானம் பேரூராட்சியில் 9வது வார்டில் வசித்துவரும் திரு. சின்னதுரை என்பவரின் வீட்டிற்கு வரைபட அனுமதி தொடர்பாக நேரில் ரூ.20,000/–மும் (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) TMB வங்கி சோனகன்விளை கிளை வங்கிக் கணக்கின் மூலம் ரூ.26,000/–மும் (ரூபாய் இருபத்தாறாயிரம் மட்டும்), ஆக மொத்தம் ரூ.46,000/–ஐ (ரூபாய் நாற்பத்தாறாயிரம் மட்டும்) தெருவிளக்கு பராமரிப்பு ஒப்பந்த ஊழியரான திரு. வனராஜ் பெற்றுக்கொண்டார். வரைபட அனுமதி அளிக்காமல் மேற்கண்ட சின்னதுரை என்ற நபருக்கு 13.1.2022 நாளிட்ட போலியான ரசீதினை வழங்கியுள்ளார். இதற்கு உடந்தையாக கணினி ஒப்பந்த ஊழியர் திரு. வனக்குறுத்து என்பவர் செயல்பட்டுள்ளார். எனவே, மேற்கண்ட ஒப்பந்த ஊழியர்களை விசாரித்தும், திரு. வனராஜ் என்பவரின் வங்கிக் கணக்கினை ஆராய்ந்தும் உரிய நடவடிக்கை எடுத்திட இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்நேர்வு தொடர்பாக சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் என்னால் வழக்கு ஒன்று (W.P (MD) No.8196/2022) தொடரப்பட்டு அது தற்போது நிலுவையில் உள்ளது என்கின்ற விவரத்தையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

4. கானம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ப. வேல்சாமி அளித்துள்ள வாக்குமூலத்தில் “மனுதாரர் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள கானம் பேரூராட்சியில் 9–வது

வார்டில் வசித்துவரும் திரு. சின்னதுரை என்பவரின் வீட்டிற்கு வரைபட அனுமதி தொடர்பாக நேரில் ரூ.20,000/–ம் (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) தனது வங்கிக் கணக்கின் மூலம் ரூ.26,000/–ம் (ரூபாய் இருபத்தாறாயிரம் மட்டும்), ஆக மொத்தம் ரூ.46,000/–ஐ (ரூபாய் நாற்பத்தாறாயிரம் மட்டும்) தெருவிளக்கு பராமரிப்பு ஒப்பந்த ஊழியரான திரு. வனராஜ் பெற்றுக் கொண்டார் என புகார் பெறப்பட்டதையொட்டி, அப்புகாரின் உண்மை தன்மை அறியப்பட்டு, அதற்குக் காரணமான இளநிலை உதவியாளர் திரு. தாமரைச்செல்வம் என்பவருக்கு விளக்கம் கேட்டு குறிப்பாணை அனுப்பப்பட்டு, விசாரணை நிலுவையில் உள்ளது என்கின்ற விவரத்தினை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்நேர்வு தொடர்பாக எனது 12.7.2022 நாளிட்ட கடிதத்தையும் எனது மேல்வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். இந்நேர்வு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு எண்.W.P.(MD) No.8196/2022 நிலுவையில் உள்ளது என்கின்ற விவரத்தையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

5. கானம் பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள , 12.7.2022 நாளிட்ட அறிக்கையில் அவர் தனது முந்தைய 30.5.2022 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்திருந்த விவரங்களையே மீண்டும் தெரிவித்துள்ளதோடு, இப்புகார் குறித்து திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரது விசாரணை அழைப்பாணை ந.க.எண்.2034–2/2021/ப3 நாள் 20.6.2022ன்படி இளநிலை உதவியாளர், ஒப்பந்த மின் உதவியாளர் மற்றும் கணினி இயக்குபவர் ஆகிய மூன்று நபர்களிடம் உதவி இயக்குநரால் நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு எழுத்துபூர்வமான விசாரணை அறிக்கை பெறப்பட்டுள்ளது என்றும், உதவி இயக்குநரது விளக்கம் கோரும் குறிப்பாணை ந.க.எண்.2034/2021/ப3 நாள் 01.7.2022 இளநிலை உதவியாளர் திரு. ரா. தாமரைச்செல்வம் என்பவருக்கு அளிக்கப்பட்டுள்ளது என்றும், இப்புகார் மனு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மனுதாரரால் தொடரப்பட்டுள்ள வழக்கு W.P.(MD) No.8196/2022 நிலுவையில் உள்ளது என்ற விபரமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், வாக்குமூலம், வாக்குமூலத்துடன் அளிக்கப்பட்ட நீதிமன்றத்தில் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு குறித்த கூடுதல் ஆவணம், கானம் பேரூராட்சி செயல் அலுவலரது விளக்க அறிக்கை, வாக்குமூலம் மற்றும் 12.7.2022 நாளிட்ட கூடுதல் விளக்க அறிக்கை மற்றும் ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- பேரூராட்சியின் தெருவிளக்கு பராமரிப்பு ஒப்பந்த ஊழியரான திரு. வனராஜ் அவர்களிடம் தனது புதிய வீட்டின் வரைபட அனுமதிக்காக முதல் தவணையாக ரூ.20,000/–ம், இரண்டாவது தவணையாக ரூ.26,000/–ம், மொத்தம் ரூ.46,000/– செலுத்தியுள்ளதாக திரு. சின்னதுரை என்பவர் 4.10.2021ல் கானம் பேரூராட்சி

செயல் அலுவலருக்கு மனு அளித்துள்ளதும், அதில் சம்மந்தப்பட்ட வரிவசூலிப்பவர், கணினி ஒப்பந்த ஊழியர், முறைகேடாக பணம் வசூல் செய்த மின்விளக்கு ஒப்பந்த ஊழியர் வனராஜ் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளதும் ஆவணங்களின்படி தெளிவாகிறது.

➢ மனுதாரரின் புகார் மனுவில் பேரூராட்சிக்கு வருமான இழப்பினை ஏற்படுத்திய ஒப்பந்த ஊழியர்கள் தெருவிளக்கு பராமரிப்பு பணி ஊழியர் திரு. வனராஜ், கணினி ஒப்பந்த ஊழியர்கள் இருவர் ஆகியோர் நடப்பு வருடாந்திர ஒப்பந்தப்புள்ளியின்படி வேலைவாய்ப்பு பெற தகுதியற்றவர்கள் என்பதால் அவர்களது ஒப்பந்த மனுவினை தள்ளுபடி செய்து, கடந்த நிதியாண்டில் அவர்கள் வழங்கிய சொத்துவரி ரசீதுகளை மறுபரிசீலனை செய்து பேரூராட்சிக்கு ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பினை ஈடுசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளதும் தெளிவாகிறது.

➢ ஒப்பந்த ஊழியர்கள் முறைகேடுகளில் ஈடுபடுவது குறித்து அளிக்கப்பட்ட புகார் குறித்து பேரூராட்சியின் செயல் அலுவலர் என்கிற முறையில் உரிய விசாரணை மேற்கொண்டிருக்கவேண்டியது செயல் அலுவலரின் தலைமைப் பணி என்பதோடு, பேரூராட்சியின் வருவாய் இனங்களில் ஏற்படக்கூடிய முறைகேடுகளை அவ்வப்போது உடனுக்குடன் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க செயல் அலுவலர் தவறியுள்ளார் என்பதும் இப்புகார் மூலம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

➢ பேரூராட்சியில் உள்ள கணினி இயக்குபவரின் துணையுடன் Pass word மூலம், சொத்துவரி ரசீதுகளில் முறைகேடுகள் ஒப்பந்த ஊழியர்கள் மூலம் நடைபெற்றுள்ளது தெரியவந்த பின்னரும், இப்புகார்களுக்குக் காரணமான ஒப்பந்த ஊழியர்களை பணிநீக்கம் செய்யாமல், காவல் துறையின்மூலம் புகார் அளித்து நடவடிக்கை மேற்கொள்ளாமலும், எச்சரிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்திருப்பது இதுபோன்ற தவறுகளை எதிர் காலத்தில் விஞ்ஞான ரீதியில் மேற்கொள்ள அவர்களை ஊக்குவிப்பதற்கு அடிகோலும் என்பதும், இதனை முளையிலேயே கிள்ளி எறியாமல் இதுவரை நடவடிக்கை எடுக்காமல், அதுவும் முழுமையான நடவடிக்கை எடுக்காமல் பாரபட்சமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதும் தெளிவாகிறது.

➢ இருப்பினும், இந்நேர்வில் மனுதாரரால் அளிக்கப்பட்டுள்ள புகார் மனு மீது உரிய காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படாததால், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மேற்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்றிடக்கோரி மனுதாரரால் நீதிப்பேராணை W.P (MD) No.8196/2022 வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது.

7. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், கானம் கஸ்பாவைச் சேர்ந்த மனுதாரர் திரு. வெ. செந்தமிழ்சேகர் என்பவரால் **12.4.2022** நாளிட்டு இம்முறைமன்ற நடுவத்திற்கு அளிக்கப்பட்ட புகார் மனுவுடன் அவரால் முன்வைக்கப்பட்டுள்ள **28.3.2022** நாளிட்ட புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள புகார்கள் குறித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற

மதுரைக் கிளையில் நீதிப்பேராணை வழக்கு W.P (MD) No.8196/2022 தாக்கல் செய்யப்பட்டு அவ்வழக்கு நிலுவையில் உள்ளது இம்முறைமன்ற நடுவத்தின் கவனத்திற்கு நேரடி விசாரணையின்போது மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் ஆவணங்களின் அடிப்படையில் தெரியவந்துள்ளது. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம் 2014, பிரிவு 10 (3) (b)ன்படி நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையிலுள்ள பொருட்பாடு எதனையும் முறைமன்ற நடுவம் விசாரணை செய்தல் கூடாது என்பதால், மனுதாரரின் இப்புகார் மனு மீது மேற்கொண்டு எந்தவிதமான நடவடிக்கையும் இம்முறைமன்ற நடுவத்தால் எடுக்க இயலாது. எனவே இப்புகார் மனு மீதான விசாரணையை இத்துடன் முடித்துவைக்கலாம் என்று இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2022ஆம் ஆண்டு, ஜூலை திங்கள் 21–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/– x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. வெ. செந்தமிழ்சேகர்,
எண்.7/88, மேலத் தெரு, கானம் கஸ்பா,
திருச்செந்தூர் வட்டம், தூத்துக்குடி மாவட்டம்–628 201
செயல் அலுவலர்,
கானம் பேரூராட்சி, கானம், தூத்துக்குடி மாவட்டம்–628 201
பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர், திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

26/7/22
செயலாளர்